ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
අති විශෙෂ அதிவிசேஷமானது
අංක 1981/76 - 2016 අගෝස්තු 25 වැනි බ්‍රහස්පතින්දා - 2016.08.25
*1981/76 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 25 ஆந் திகதி வியாழக்கிழமை*
(அரசின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

5 ஆம் பிரிவின் படியான பிரகடனம்

*கீழ்க்காணும் காணி ரிதியகம நீர் வழங்கல் கருத்திட்டத்தின் கீழ் நீர் சுத்திகரிப்பு ஆலைக்கு உட்செல்லும் பாதையை நிர்மாணிப்பதற்காக வேண்டியதாய் இருக்கின்றதென்றும் காணி கொள்ளும் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அது எடுத்துக்கொள்ளப்படுமென்றும் காணி எடுத்தற் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் காணி அமைச்சர் ஜோன் என்தனி எம்மானுவெல் அமரதுங்க ஆகிய நான் இத்தால் பிரகடனம் செய்கின்றேன்.*

*தென் மாகாணத்தில், ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில், அம்பலாந்தொட்டை பிரதேச செயலாளர் பிரிவில், ரிதியகம (இ.கி.வ. 564) கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவை நாயகத்தினால் 2012.12.04 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட ஆரம்ப வரைபட இல. எச்/ ஏஎம்பீ/2012/624 ஐக் கொண்ட சுமார் 0.1670 ஹெக்டயார் விஸ்தீரணம் கொண்ட ரிதியகம கிராமத்தில் நீர்ப்பாசனக் காணி அல்லது அரசாங்கக் காணி என்றழைக்கப்படும் கீழ்க் காணப்படும் காணித்துண்டின் எல்லைகள் :*

*01.* **துண்டு " பீ " - நீர்ப்பாசனக் காணி அல்லது அரசாங்கக் காணி - விஸ்தீரணம் : 0.1670 ஹெக்டயார்**

*வடக்கு : நீர்ப்பாசனத் திணைக்களம் உரிமை கோரும் காணி மற்றும் ரிதியகம அம்பலாந்தொட்டை வீதி ; கிழக்கு : ரிதியகம அம்பலாந்தொட்டை வீதி மற்றும் நீர்ப்பாசனத் திணைக்களம் உரிமை கோரும் காணி ; தெற்கு : நீர்ப்பாசனத் திணைக்களம் உரிமை கோரும் காணி மற்றும் அம்பலாந்தொட்டை பிரதேச சபை உரிமை கோரும் காணி ; மேற்கு : அம்பலாந்தொட்டை பிரதேச சபை உரிமை கோரும் காணி மற்றும் நீர்ப்பாசனத் திணைக்களம் உரிமை கோரும் காணி.*

*ஜோன் ஏ. ஈ. அமரதுங்க,*
*காணி அமைச்சர்.*

*எனது இல. : 4/3/9/2012/டப்ளியூஎஸ்/77.*
*காணி அமைச்சு,*
*"மிஹிகத மெதுர",*
*ரஜமல்வத்தை வீதி,*
*பத்தரமுல்லை,*
*2016.03.15.*

*09 - 378*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.